بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13/12/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## குர(த்)தா போர் நடவடிக்கையின் பின்னணியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பான குறிப்பில் இன்று குர(த்)தா எனும் ஒரு போர் நடவடிக்கையைக் குறித்து எடுத்துக் கூறுவேன். இந்த போர் நடவடிக்கை ஹிஜ்ரீ 6 ஆம் ஆண்டு முஹர்ரம் பத்தாம் நாளில் நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களின் தலைமையில் 30 படைவீரர்களை குர(த்)தா எனுமிடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். இந்த போர் நடவடிக்கைக்காக அவர்கள் 19 இரவுகள் மதீனாவை விட்டு வெளியே இருந்தார்கள். ஹிஜ்ரீ 6 ஆம் ஆண்டு முஹர்ரம் 29 ஆம் நாள் அவர்கள் மதீனாவுக்கு திரும்பி வந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் பல்வேறு நூல்களில் இருந்தும் வரலாற்று நூல்களில் இருந்தும் இதன் விபரத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் எழுதுகிறார்கள்: ஹிஜ்ரீ 6 ஆம் ஆண்டு சந்திர வருடத்தின் முதல் மாதமான முஹர்ரமுடைய ஆரம்ப நாட்களில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நஜது வாசிகள் சார்பாக ஆபத்து இருப்பதாக தகவல் வந்தடைந்தது. இந்த ஆபத்து குர(த்)தா எனும் கோத்திரம் சார்பாக இருந்தது. இவர்கள் பனூ பக்ர் கோத்திரத்தின் கிளைக் கோத்திரத்தினராக இருந்தார்கள். நஜது பகுதியில் ஸரியா எனும் இடத்தில் இவர்கள் குடியிருந்தார்கள். மதீனாவில் இருந்து ஏழு நாள் பயணத் தொலைவில் இந்த இடம் இருந்தது.

*இவர்கள் எதிரி சமுதாயமாக இருந்தார்கள்; மதீனா மீது தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்; அதை தடுத்து நிறுத்துவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த படைப் பிரிவை அனுப்பி வைத்தார்கள்; அங்கு நடந்த போர் நடவடிக்கையில் பெண்கள் மற்றும் குழந்தைகளை எதுவும் செய்யவில்லை. அவர்கள் மீது மென்மை காட்டப்பட்டது என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விளக்கத்துடன் எடுத்துரைத்தார்கள்.*

அச்சந்தர்ப்பத்தில் **சுமாமா பின் உஸால் என்பவர் கைது செய்யப்பட்டதைக் குறித்தும், அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதைக் குறித்தும் குறிப்பு காணப்படுகிறது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் இதற்கான விளக்கத்தை எழுதும் போது இவ்வாறு எழுதுகிறார்கள்:** குர(த்)தா போர் நடவடிக்கையில் இருந்து திரும்பிச் செல்லும் போது சுமாமா பின் உஸால் என்பவர் கைது செய்யப்பட்ட சம்பவமும் நிகழ்ந்தது. ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு தூதுவர் இந்த பகுதிக்கு சென்றிருந்தபோது சுமாமா பின் உஸால் என்பவர் அனைத்து போர் சட்டங்களையும் ஒரு புறம் வைத்துவிட்டு இவரை கொலை செய்வதற்கு திட்டம் தீட்டினார். எந்த அளவுக்கென்றால் ஒரு முறை அவர் பெருமானார் (ஸல்) அவர்களையும் கொலை செய்வதற்கு எண்ணம் கொண்டார். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களின் குழு சுமாமா பின் உஸால் -ஐ கைது செய்து கொண்டு வந்த போது இவர்களுக்கு அவரை அடையாளம் தெரியவில்லை. சந்தேகத்தின் அடிப்படையில்தான் அவரை கைது செய்து கொண்டு வந்திருந்தனர். சுமாமா பின் உஸால் -ம் மிகவும் சுதாரிப்புடன் தம் உண்மை நிலை அவர்கள்

மீது வெளிப்படாமல் பார்த்துக் கொண்டார் என்பதும் தெரிய வருகிறது. ஏனென்றால் தம் மீது இஸ்லாத்திற்கு எதிரான மிகவும் அபாயகரமான குற்றப் பழி இருப்பதையும், இஸ்லாத்தின் தன்மானம் கொண்ட இந்த வீரர்களுக்கு தாம் யார் என்று தெரிய வந்தால் அவர்கள் ஒருவேளை தன் மீது கடுமை காட்டலாம் அல்லது கொலை கூட செய்துவிடலாம் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அத்துடன் பெருமானார் (ஸல்) அவர்கள் சார்பாக தம்முடன் நல்ல முறையில் நடந்து கொள்ளப்படும் என்றும் அவர் எதிர்பார்ப்பு வைத்திருந்தார். ஆகவே மதீனா சென்றடையும் வரை ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களின் குழுவுக்கு சுமாமா அவர்களின் ஆளுமையைக் குறித்து அடையாளம் தெரியாமல் இருந்தது.

மதீனா சென்றடைந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் சுமாமா கொண்டுவரப்பட்டபோது அன்னார் அவரைக் கண்டவுடனேயே அடையாளம் கண்டு கொண்டார்கள். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) மற்றும் அவர்களின் தோழர்களிடம், இவர் யார் என்று உங்களுக்கு தெரிகிறதா எனக் கேட்டார்கள். அவர்கள் தம் அறியாமையை வெளிப்படுத்தியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் சுமாமாவுடைய உண்மை நிலையை எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தம் வழக்கமான நடைமுறைக்கேற்ப சுமாமாவுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். பிறகு அன்னார் தம் வீட்டுக்குச் சென்று வீட்டில் உள்ளவர்களிடம், உணவுக்காக எதுவெல்லாம் ஆயத்தமாக உள்ளதோ அவை அனைத்தையும் சுமாமாவுக்காக அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள். அத்துடன் பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடம், சுமாமாவை ஏதேனும் ஒரு வீட்டில் வைப்பதற்கு பதிலாக மஸ்ஜித் நபவிய்யுடைய வளாகத்தில் உள்ள ஒரு தூணுடன் இணைத்துக் கட்டி சிறை வைக்குமாறு கூறினார்கள். அன்னார் இவ்வாறு கூறியதற்கான காரணம் என்னவென்றால், அன்னாருடைய சபைகள் மற்றும் முஸ்லிம்களின் தொழுகைகள் ஆகியவை சுமாமா உடைய கண்களுக்கு முன்னால் நிகழ வேண்டும் என்றும் அதனால் அவருடைய உள்ளம் இந்த ஆன்மிக காட்சிகளை கண்டு தாக்கத்திற்குள்ளாகி இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட வேண்டும் என்றும் அன்னார் விரும்பினார்கள்.

அந்நாட்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு காலைப்பொழுதும் சுமாமாவுக்கு அருகில் சென்று அவரை நலம் விசாரிப்பார்கள். சுமாமா! இப்பொழுது என்ன நினைக்கிறீர் என்று கேட்பார்கள். அதற்கு சுமாமா, முஹம்மது(ஸல்) அவர்களே! தாங்கள் என்னை கொலை செய்வீர்கள் என்றால் தங்களுக்கு அதற்கான உரிமை உள்ளது. ஏனென்றால் எனக்கு எதிராக கொலை குற்றம் உள்ளது. ஆனால் தாங்கள் என்னுடன் கருணையுடன் நடந்து கொண்டால் என்னை நன்றியுடையவனாய் காண்பீர்கள் அல்லது தாங்கள் ஃபித்யா (இழப்பீடு) வாங்க விரும்பினால் நான் ஃபித்யா கொடுப்பதற்கும் ஆயத்தமாக இருக்கிறேன் என்று கூறுவார். மூன்று நாட்கள் வரை இதே கேள்வி பதில் நடந்து கொண்டிருந்தது. இறுதியில் மூன்றாம் நாளில் பெருமானார் (ஸல்) அவர்களே சஹாபிகளிடம் சுமாமாவின் கட்டுக்களை அவிழ்த்து அவரை விடுதலை செய்து விடுமாறு கூறினார்கள். சஹாபிகளும் உடனடியாக அவரை விடுவித்தனர். சுமாமா விரைவாக பள்ளிவாசலை விட்டு வெளியே சென்றார். ஒருவேளை அவர் தம் சொந்த ஊருக்கு திரும்பிச் செல்கிறாரோ என சஹாபிகள் நினைத்துக் கொண்டனர். ஆனால் சுமாமாவின் உள்ளம் வெற்றி கொள்ளப்பட்டு விட்டது என்பதை பெருமானார் (ஸல்) அவர்கள் புரிந்து கொண்டார்கள். இப்பொழுது அவர் மீது பெருமானார் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றல் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆகவே அதன் விளைவும் எவ்வாறு இருந்தது என்றால், அவர் அருகில் இருந்த தோட்டத்திற்கு சென்றார். அங்கு குளித்துவிட்டு திரும்பினார். வந்த உடனேயே பெருமானார் (ஸல்) அவர்களின் கையில் (பைஅத் செய்து) முஸ்லிம் ஆகிவிட்டார். அதற்குப் பிறகு அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒரு காலத்தில் எனக்கு முழு உலகிலும் தங்கள் மீதும், தங்களுடைய மார்க்கத்தின் மீதும், தங்களுடைய நகரத்தின் மீதும் அதிக பகைமை இருந்தது. ஆனால் இப்பொழுது தாங்களும், தங்களுடைய மார்க்கமும், தங்களுடைய நகரமும் அனைத்தையும் விட அதிக நேசத்திற்குரியதாக ஆகிவிட்டது என்று கூறினார்கள்.

முஸ்லிமான பிறகு சுமாமா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களுடைய ஆட்கள் என்னை சிறைபிடித்த போது நான் கஅபதுல்லாஹ்வை உம்ரா செய்வதற்காக சென்று கொண்டிருந்தேன். இப்பொழுது எனக்கு என்ன வழிகாட்டல் என்று கேட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்கு அனுமதி வழங்கி துஆ செய்தார்கள். சுமாமா (ரலி) அவர்கள் மக்காவை நோக்கி புறப்பட்டார்கள். அங்கு சென்றடைந்த பிறகு சுமாமா (ரலி) அவர்கள் ஈமானிய உத்வேகத்தின் காரணமாக குறைஷியர்களுக்கு மத்தியில் பகிரங்கமாக தப்லீக் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். குறைஷியர்கள் இக்காட்சியை கண்டபோது கோபத்தின் காரணமாக அவர்களின் கண்கள் சிவந்து விட்டன. சுமாமா (ரலி) அவர்களைப் பிடித்து அம்மக்கள் கொல்ல விரும்பினார்கள். ஆனால் அவர்கள் யமாமா பகுதியின் தலைவராக இருந்த காரணத்தினாலும், யமாமாவுடன் மக்காவுக்கு பழைய வர்த்தக தொடர்புகள் இருந்த காரணத்தினாலும் அவர்கள் இந்த எண்ணத்தை விட்டு விட்டனர். சுமாமா (ரலி) அவர்களை ஏசிப் பேசி, விட்டு விட்டார்கள். ஆனால், சுமாமா (ரலி) அவர்களின் இயல்பில் பெரும் உத்வேகம் இருந்தது. காஃபிர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடனும் அன்னாருடைய சஹாபிகளுடனும் செய்த அநீதிகள் அனைத்தும் அவர்களின் கண்களுக்கு முன்னால் இருந்தன. அவர்கள் மக்காவை விட்டு விடைபெற்றுச் செல்லும் போது குறைஷியர்களைப் பார்த்து, இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அனுமதி அளிக்காத வரை யமாமாவில் இருந்து உங்களுக்கு எந்தவொரு தானியமும் வராது என்று கூறிச் சென்றார்கள்.

சுமாமா (ரலி) அவர்கள் தம் ஊருக்கு திரும்பிச் சென்ற பிறகு மக்காவுக்கு செல்லக்கூடிய யமாமாவின் (வியாபாரக்) குழுக்களை உண்மையிலேயே தடுத்து நிறுத்தி விட்டார்கள். மக்காவுக்கு வரக்கூடிய உணவின் பெரும் பகுதி யமாமாவில் இருந்துதான் வந்து கொண்டிருந்தது. ஆகவே இந்த வர்த்தகம் தடைபட்டு போனதன் காரணமாக மக்கத்துக் குறைஷியர்கள் பெரும் கஷ்டத்திற்கு ஆளானார்கள். அதிக காலம் கூட கடந்திருக்காது அம்மக்கள் பயந்து போய் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஒரு கடிதம் எழுதினார்கள். அதில், தாங்கள் எப்பொழுதும் உறவுகளை பேணுமாறு கட்டளை இடுகிறீர்கள். நாங்களோ தங்களுடைய சகோதரர்களாக இருக்கின்றோம். இந்த துன்பத்திலிருந்து எங்களுக்கு இரட்சிப்பு கொடுங்கள் என்று எழுதி அனுப்பினார்கள். அப்போது குறைஷியர்கள் எந்த அளவு பயந்து போய் இருந்தார்கள் என்றால் அவர்கள் கடிதம் அனுப்பியதை மட்டும் போதுமானதாகக் கருதாமல் தம்முடைய தலைவரான அபூ சுஃப்யான் பின் ஹர்ப் அவர்களையும் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அனுப்பி வைத்தார்கள். அபூ சுஃப்யான் பின் ஹர்ப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி நேரடியாகவும் தங்கள் துன்பத்தை எடுத்து வைத்து மன்றாடி கருணை காட்டுமாறு வேண்டினார்கள். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் சுமாமா (ரலி) அவர்களுக்கு ஒரு வழிகாட்டல் அனுப்பினார்கள். அதில், மக்காவாசிகளின் உணவுப் பொருட்களை கொண்டு செல்லக்கூடிய குறைஷியர்களின் குழுக்களை தடுத்து நிறுத்த வேண்டாம் என்று எழுதினார்கள். ஆகவே இந்த வர்த்தக தொடர்பு மீண்டும் ஆரம்பமானது. மக்காவாசிகளுக்கு இந்த துன்பத்திலிருந்து இரட்சிப்பு கிடைத்தது.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 6 மர்ஹூம்களைப் பற்றிய குறிப்பை எடுத்துரைத்தார்கள். அதில் ஒரு ஜனாஸா (அங்கு இருந்த) ஹாஸிர் ஜனாஸா ஆகும். மற்ற 5 ஜனாஸாக்கள் (அங்கு இல்லாத) காயிப் ஜனாஸா ஆகும். மர்ஹூம்களில் இருவர் ஷஹீது ஆவார்கள். அவர்களின் பெயர்கள்;*

1. ராவல்பிண்டியில் வசித்து வந்த மதிப்பிற்குரிய மன்ஸூர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய தய்யுப் அஹ்மத் சாஹிப் ஷஹீது. இவர்களை அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவன் டிசம்பர் 5 ஆம் தேதி கோடாரியால் தாக்கி ஷஹீது ஆக்கிவிட்டான்.

2. பாலஸ்தீனம் காஸாவைச் சார்ந்த முஹன்னத் முஅய்யத் அபூ அவ்வாத் சாஹிப் ஷஹீது. இவர்கள் Drone தாக்குதலில் 20 வயதில் ஷஹீது ஆகிவிட்டார்கள்.

மற்ற மர்ஹூம்களின் பெயர்கள் பின்வருமாறு; அமெரிக்காவின் முன்னாள் துணை அமீரான மதிப்பிற்குரிய டாக்டர். மஸ்வூத் அஹ்மத் மலிக் சாஹிப், மதிப்பிற்குரிய மியா(ன்) முஹம்மத் ஷஃபீ லோதி சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய ஷபீர் அஹ்மத் லோதி சாஹிப், காதியானுடைய தர்வேஷ் மதிப்பிற்குரிய மவ்லவி முஹம்மத் அய்யூப் பட் சாஹிப்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மவ்லவி முஹம்மத் அய்யூப் பட் சாஹிப் தர்வேஷ் அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறும் போது கூறினார்கள்:*

மர்ஹூமுடைய குடும்பத்தில் அவர்களின் தாயார் மதிப்பிற்குரிய கரீம் பீபீ சாஹிபா அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. மர்ஹூம் அவர்கள் எழுதியிருப்பது போன்று, அவர்களின் இளமைப் பருவத்தில் கனவில் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை குதிரையில் அமர்ந்திருப்பதாகக் கண்டார்கள். இந்த கனவுக்கு மர்ஹூமின் தாயார் விளக்கம் அளிக்கும்போது, மார்க்கப் பணிகள் செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவான் என்று கூறினார்கள். 1939 இல் மவ்லவி சாஹிப் அவர்கள் தம் வாழ்வை அர்ப்பணித்தார்கள். ஈரானுக்கு செல்லுமாறு ஜமாஅத் நிர்வாகம் சார்பாக அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. அங்கு ஐந்து வருடங்கள் மார்க்கத் தொண்டாற்றினார்கள். அதற்குப் பிறகு ஆப்கானிஸ்தான் காபுல் செல்லுமாறு கட்டளை இடப்பப்பட்டது. காபுல் செல்வதற்காக குவெட்டா (Quetta) -ல் இருந்தபோது குவெட்டாவுடைய அமீர் ஜமாஅத் அவர்கள் மர்ஹூமிடம், காதியான் செல்லுமாறு தங்களுக்கு அழைப்பு வந்துள்ளது என்று கூறினார்கள். அது இந்தியா பாகிஸ்தான் பிரிவினை காலமாக இருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்து லாகூருக்கு சென்றிருந்தார்கள். மவ்லவி சாஹிப் அவர்கள் லாகூர் சென்றடைந்த போது ‘காதியான் செல்வதற்கு இந்த கடைசி Truck ஆயத்தமாக நிற்கிறது. இதற்குப் பிறகு வேறு எந்த Truck -ம் புறப்பட முடியாமல் போகலாம். ஆகவே தாங்கள் காதியானுக்கு செல்லுங்கள்’ என்று அவர்களிடம் கூறப்பட்டது. மர்ஹூம் அவர்கள் காதியான் சென்ற பிறகு பல்வேறு இடங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் வழிகாட்டலின் அடிப்படையில் இந்தியாவில் தப்லீக் பணியை மேற்கொள்வதற்காக உத்தரபிரதேச மாநிலத்தில் ஜான்சிக்கு முஅல்லிம் ஆக அனுப்பப்பட்டார்கள். மிகவும் சிறந்த முறையில் அங்கு தப்லீக் பணியை மேற்கொண்டார்கள்.

மர்ஹூம் அவர்களுக்கு இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. அந்த காலகட்டத்திலேயே மர்ஹூம் அவர்கள் செயல் களத்தில் இருந்த போது ஹோமியோபதியுடைய டிகிரியையும் பெற்றார்கள். மர்ஹூம் மூலமாக பல நல்லியல்பு கொண்ட நபர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை பெற்றார்கள். மர்ஹூமுடைய ஒரு மகன் டாக்டர் மஹ்மூது அஹ்மத் பட் சாஹிப் மற்றும் மருமகள் டாக்டர் மஞ்சு பட் சாஹிபா ஆகியோர் வாழ்வை அர்ப்பணித்துள்ளார்கள். அவர்கள் நீண்ட காலமாக கானாவில் தொண்டாற்றினார்கள். தற்போது காதியான் நூர் ஹாஸ்பிடலில் தொண்டாற்றி வருகிறார்கள். அதே போன்று மர்ஹூமுடைய இன்னொரு மகனும் அமெரிக்காவில் டாக்டர் ஆக இருக்கிறார்.

மர்ஹூமுடைய அந்தஸ்துகளை அல்லாஹ் உயர்த்துவானாக! அவர்களின் பிள்ளைகளுக்கும் சந்ததிகளுக்கும் அவர்களுடைய நன்மைகளை தொடரக்கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَن یَّھْدِہِ اللّٰہُ فَلاَ مُضِلَّ لَہٗ
وَمَنْ یُّضْلِلْہُ فَلاَ ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلاَّ اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی
الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)